நவம்பர் – 09

TNPSC துளிகள்

- திட்டம் 108-இன் கீழ், பூட்டான் ஒன்பது மணி நேரத்தில் 108 புத்த ஸ்தூபிகளைக் கட்டியது, மேலும் கெலெஃபு மைண்ட்ஃபுல்னெஸ் சிட்டி (GMC) திட்டத்திற்கான இந்தியாவின் ஆதரவை அங்கீகரிக்கும் விதமாக, மன்னர் ஜிக்மே கேசர் நாம்ஜியல் வாங்சுக் 76-வது ஸ்தூபியை பிரதமர் நரேந்திர மோடிக்கு அர்ப்பணித்தார்.
  - GMC என்பது இந்தியாவின் அசாம் எல்லையை ஒட்டிய தெற்கு பூட்டானில் திட்டமிடப்பட்ட ஒரு சிறப்பு நிர்வாகப் பகுதியாகும் (SAR).
- இந்தியாவின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புச் சூழலியலை வலுப்படுத்துவதற்காக ESTIC-2026 (வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மாநாடு) புது தில்லியில் நடைபெற்றது, இதனை அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை (CSIR) ஏற்பாடு செய்தது.
  - இதன் கருத்துரு "Creative Minds, Catalyzing Science, Empowering Technologies" என்பதாகும்.
- கவுஹாத்தியில் உள்ள கவுகாத்தி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இந்தியாவின் முதல் பொதுத்துறை புரோட்டான் சிகிச்சை மையத்தை நிறுவுவதற்காக, அசாம் அரசாங்கம் பெல்ஜியத்தை தளமாகக் கொண்ட அயன் பீம் அப்ளிகேஷன்ஸ் (IBA) பார்ட்டிகல்ஸ் நிறுவனத்துடன் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 31 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.
- தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, 2026 ஆம் ஆண்டு நவம்பர் 5 அன்று மாநிலம் முழுவதும் உள்ள 218 கூட்டுறவு கடைகள் மூலம் 10 வகையான காய்கறிகள் அடங்கிய வெற்றி சிறப்பு காய்கறித் தொகுப்பினை தமிழ்நாடு அரசு ₹100-க்கு அறிமுகப்படுத்தியது.
- மணிப்பூரில் மியான்மர் எல்லைக்கு அருகே உள்ள சிந்த்வின் நதி அமைப்பில் உள்ள துஜாங் நதியின் துணை நதியான பூபால் ஓடையில், எக்ஸோஸ்டோமா நாசிபார்பட்டம் (Exostoma nasibarbatum) என்ற அரிய புதிய கிளிப்டோஸ்டெர்னைன் கெளுத்தி மீன் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- செயற்கை உறுப்புகள் மற்றும் எலும்பியல் சிகிச்சை சேவைகள், மறுவாழ்வு மற்றும் நடமாட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5 அன்று சர்வதேச செயற்கை உறுப்புகள் மற்றும் எலும்பியல் சிகிச்சை தினம் (IPOD) அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "PEOPLE" என்பதாகும்.

தமிழ்நாட்டுச் செய்திகள்

தமிழ்நாட்டில் பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள்


- தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் 50% க்கும் அதிகமானவை பெண்களால் வழி நடத்தப் படுகின்றன.
- தமிழ்நாட்டில் 16,000 க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன, அவற்றில் 50.8% பெண்கள் தலைமையிலானவை.
- சென்னையில் நடைபெற்ற பெஸ்ட் ஆஃப் பெஸ்ட் (BoB) மாநாடு மற்றும் விருதுகள் 2026-இல் இந்த தரவுகள் அறிவிக்கப்பட்டன.
- பியர்-லேர்னிங் (சக குழு கற்றல்) குழுக்கள் மூலம் பணியிட உள்ளடக்கத்தை

மேம்படுத்துவதற்காக அவதார் கரியர் கிரியேட்டர்ஸ் லிமிடெட் மற்றும் செராமவுண்ட் நிறுவனங்கள் இணைந்து உள்ளடக்கிய கலாச்சாரங்களின் வட்டம் (CIC) எனும் அமைப்பினைத் தொடங்கின.

- இந்த மாநாட்டில் பெண்களின் வேலைவாய்ப்பு, பணியிட உள்ளடக்கம், சுற்றுச்சூழல், சமூக மற்றும் நிர்வாக (ESG) நடைமுறைகள் மற்றும் பணியிட நல்வாழ்வு ஆகியவற்றுக்காக நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டன.



அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செயல்பாட்டு அளவீடு 2026




- நிதி ஆயோக்கின் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் (S&T) செயல்பாட்டு அளவீட்டில் ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் காப்புரிமை விண்ணப்பங்களில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில், தமிழ்நாடு 44,611 ஆராய்ச்சி வெளியீடுகளைப் பதிவு செய்துள்ளது, அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (29,298) மற்றும் மகாராஷ்டிரா (28,947) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- காப்புரிமை விண்ணப்பங்களில், தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது, அதைத்

தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளன.

- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கான ஊடாடும் தளமாக நிதி ஆயோக் மூலம் இந்த செயல்பாட்டு அளவீடு உருவாக்கப்பட்டுள்ளது.
- இது ஆராய்ச்சி நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) நிறுவனங்கள், ஆழ்-தொழில்நுட்ப (deep-tech) புத்தொழில் நிறுவனங்கள், காப்பகங்கள், ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் காப்புரிமைகள் குறித்த தரவுகளை ஒருங்கிணைக்கிறது.
- இது சான்றுகள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சியின் தரம், தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை ஒப்பிடுவதை ஆதரிக்கிறது.

சுற்றுச்சூழல் செய்திகள்

COP30 புதைபடிவ எரிபொருள் மாற்றத்திற்கான வழிகாட்டுதல் 2026




- பிரேசிலின் 30 வது பருவநிலை மாற்ற மாநாட்டுத் (COP30) தலைமையகம் புதைபடிவ எரிபொருட்களிலிருந்து மாறுவதற்கான வழிகாட்டுதலை வெளியிட்டது, அதே வேளையில் COP31 உலகளாவிய மின்மயமாக்கல் உறுதிமொழியில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது.
- புதைபடிவ எரிபொருள்களிலிருந்து மாறுவதற்கான வழிகாட்டுதல் (TAFF) ஆனது புதைபடிவ எரிபொருள் நுகர்வைக் குறைத்தல், தூய்மையான ஆற்றலை விரிவுபடுத்துதல் மற்றும் புதைபடிவ எரிபொருளைச் சார்ந்திருக்கும் பொருளாதாரங்களை மாற்றுதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கிறது.
- 2035 ஆம் ஆண்டளவில் உலகளாவிய இறுதி ஆற்றல் நுகர்வில் மின்சாரத்தின் பங்கை 35% ஆக அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட துருக்கியின் வரவிருக்கும் COP31 தலைமையால் தொடங்கப்பட்ட 35-by-35 எனும் உலகளாவிய மின்மயமாக்கல் உறுதிமொழியில் கையெழுத்திட இந்தியா மறுத்துவிட்டது.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் எல்லை சரிசெய்தல் முறைமைக்கு (CBAM) தனது எதிர்ப்பை இந்தியா மீண்டும் வலியுறுத்தியது.
- வளரும் நாடுகளுக்கு ஆதரவளிக்க சர்வதேச பருவநிலைக்கு நிதியளிப்பதை அதிகரிக்க வேண்டும் என இந்தியா அழைப்பு விடுத்துள்ளது; பாகு-டு-பெலெம் வழி

காட்டுதல் 2035 ஆம் ஆண்டிற்குள் ஆண்டுக்கு குறைந்தது 1.3 டிரில்லியன் டாலர்களைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- COP30 வழிகாட்டுதல் தன்னார்வ அடிப்படையிலானது மற்றும் புதிய தேசிய இலக்குகள் அல்லது பிணைக்கப்பட்ட கடமைகளை நிறுவவில்லை.

அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

உலகளாவிய சுற்றுச்சூழல் சிந்தனைக் குழு மேம்பாட்டு அறிக்கை 2025



- சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்ற சுற்றுச்சூழல் சிந்தனைக் குழுக்களின் சர்வதேச மாநாட்டில் உலகளாவிய சுற்றுச்சூழல் சிந்தனைக் குழு மேம்பாட்டு அறிக்கை 2025 வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கை 97 நாடுகளில் உள்ள 886 சுற்றுச்சூழல் சிந்தனைக் குழுக்களை வரைபடமாக்குகிறது மற்றும் அவற்றின் ஆராய்ச்சித் திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிர்வாகத்திற்கான பங்களிப்பை ஆராய்கிறது.
- இவற்றில், 499 சிந்தனைக் குழுக்கள் 26 வளர்ந்த நாடுகளிலும், 387 சிந்தனைக் குழுக்கள் 71 வளரும் நாடுகளிலும் உள்ளன.
- புது தில்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) உலகின் தலைசிறந்த 100 சுற்றுச்சூழல் சிந்தனைக் குழுக்களில் இடம்பெற்றுள்ளது.
- சுற்றுச்சூழல் மாசுபாடு, பல்லுயிர்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய மூன்று பிரிவுகளில் சிறந்த 50-இல் CSE-யும் இடம்பிடித்துள்ளது.
- நிதி, நிறுவன பலம் மற்றும் ஆராய்ச்சித் திறன்களில் உள்ள வேறுபாடுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட ஆராய்ச்சியின் அவசியத்தை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

எழுத்தாளர் ரா. முருகன் மறைவு

- தமிழ் எழுத்தாளர் ரா. முருகன் தனது 73 ஆவது வயதில் காலமானார்.

- சிவகங்கையில் பிறந்த இவர் புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரியில் உயர்கல்வியை முடித்தார்.
- இவரது இலக்கியப் பயணம் 1977–78 ஆம் ஆண்டில் கணையாழி என்ற தமிழ் இதழில் வெளியான நவீன கவிதையுடன் தொடங்கியது.
- இவரது குறிப்பிடத்தக்க படைப்புகளில் மூன்று விரல், அரசூர் வம்சம், விஸ்வரூபம், மிளகு மற்றும் தி கோஸ்ட்ஸ் ஆஃப் அரசூர் (ஆங்கில மொழிபெயர்ப்பு) ஆகியவை அடங்கும்.
- பல இலக்கிய விருதுகளுடன் சேர்த்து, 2024 ஆம் ஆண்டிற்கான விஷ்ணுபுரம் இலக்கிய விருதையும் அவர் பெற்றுள்ளார்.



தமிழ்நாடு வனவிலங்கு பாதுகாப்பு விருதுகள்

- சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகளுக்கு எதிரான தமிழ்நாட்டின் வனவிலங்கு பாதுகாப்பு முன்னெடுப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான யானைகள் எச்சரிக்கை அமைப்பு ஆகியவை தேசிய விருதுகளைப் பெற்றன.
- சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகளால் ஏற்படும் யானைகளின் இறப்பைத் தடுக்கும் வகையில் ஒசூர் வனக்கோட்டம் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 'ஒழிப்போம் துப்பாக்கியை, காப்போம் யானைகளை' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- இந்தப் பிரச்சாரத்தின் இரண்டு கட்டங்களின் போது, 239 சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கிகள் தாமாக முன்வந்து ஒப்படைக்கப்பட்டன, இது வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதைக் குறைக்க உதவியது.
- ஒசூர் பிரச்சாரத்திற்காக கே. கார்த்திகேயனிக்கு சிறப்பு நடுவர் விருதும், முதுமலை நிலப்பரப்பில் சமூகம் சார்ந்த பாதுகாப்பு மற்றும் அறிவியல் கண்காணிப்புக்காக எஸ். செண்பகப்ரியாவுக்கு ஈக்கோ-வாரியர் (Eco-Warrior) விருதும் வழங்கப்பட்டது.
- கோயம்புத்தூர் மதுக்கரை வனச்சரகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்கை

நுண்ணறிவு அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் முன் எச்சரிக்கை அமைப்பு, 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இருந்து சுமார் 2,800 யானைகள் ரயில் பாதைகளை பாதுகாப்பாகக் கடப்பதை உறுதி செய்ய உதவியுள்ளது.



விளையாட்டுச் செய்திகள்

டேமர் குத்துச்சண்டை போட்டி 2026



- பின்லாந்தின் தம்பேர் நகரில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 30 முதல் நவம்பர் மாதம் 1 ஆம் தேதி வரை நடைபெற்ற 46-வது சர்வதேச டேமர் குத்துச்சண்டை போட்டி 2026-இல் இந்தியா பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.
- 14 பேர் கொண்ட இந்திய அணி 4 தங்கம், 2 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என மொத்தம் 14 பதக்கங்களை வென்றது.
- ஆர்த்தி தாரியல் (54 கிலோ), அங்குஷிதா போரோ (65 கிலோ), அருந்ததி சவுத்ரி (70 கிலோ) மற்றும் பவன் பார்த்வால் (55 கிலோ) ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.
- ஜாஸ்மின் லம்போரியா (57 கிலோ) மற்றும் முகமது ஹுசாமுதீன் (60 கிலோ) ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

- விவேக் மீனா, ஹிதேஷ், அக்ஷய், போபின் சவுகான், சேத்தன் சவுத்ரி, தனு, திஷா பாட்டீல் மற்றும் இம்ரோஸ் கான் ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்றனர்.
- பதக்கம் பெற்றவர்களில் பவன் பார்த்வால் மற்றும் அருந்ததி சவுத்ரி ஆகியோர் இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★